

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கி தெற்கு ஒன்றியம் நாகுடியில் ஒன்றியக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் – தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்து கொண்டு கழக தொண்டர்களின் கோரிக்கைகளை கேட்டு அறிந்து ஆலோசனைகளை வழங்கினார்கள். உடன் தேர்தல் பணிக்குழு செயலாளர் பரணி இ.ஏ. கார்த்திகேயன், அறந்தாங்கி தெற்கு ஒன்றியச் செயலாளர் பொன்.கணேசன், அறந்தாங்கி நகரக் கழகச் செயலாளர் க.ராஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் த.மணிராஜன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் பாக்கியலக்ஷ்மி கார்த்திகேயன் மாவட்ட தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஹரி விமலாதி ராஜன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், உள்ளாட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.



சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட காடையாம்பட்டி, கிழக்கு, மேற்கு ஒன்றியத்தில் சேலம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர். டி.எம். செல்வ கணபதி மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர். இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. ஆகியோர் பன்னப்பட்டி, மாரகவுண்டன்புதூர தின்னப்பட்டி உட்பட 50 கிராமங்களில் வாக்களித்த வாக்காளர்களுக்கு. நன்றி தெரிவித்தார்கள். உடன் ஒன்றியச் செயலாளர்கள். கே.சி. அறிவழகன், கே.சி.ரவிச்சந்திரன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் இருந்தனர்.

### சாலை விபத்தில் உயிரிழந்த

# பெண் காவலரின் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக 24-

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி, இரட்டைவயல் கிராமம் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த ஆயுதப்படை பெண் காவலரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் ரூ. 25 இலட்சம் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

தஞ்சாவூர் மாவட்ட ஆயுதப் படை பெண் காவலராக பணியாற்றிவந்த அரியலூர் மாவட்டம், பெரியகிருஷ்ணாபுரம்கிராமத்தைச் சேர்ந்த செல்வி.சுபபிரியா (காவலர் எண்.1680) (வயது 23) த/பெ.சக்திவேல் என்பவர் 21.8.2024 அன்று மாலை சுமார் 08.30 மணியளவில் பட்டுக்கோட்டை உட்கோட்டம், பேராவூரணி, இரட்டைவயல் கிராமம், கண்ணமுடையார் அய்யனார் கோவில் திருவிழாவின் பாதுகாப்பு பணி முடிந்து தனது தங்குமிடத்திற்கு நடந்து சென்றுகொண்டிருந்தபோது அவரது பின்புறம் பேராவூரணியிலிருந்து இரட்டைவயல் நோக்கி வந்த இருசக்கர வாகனம் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் தலையில் காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக பேராவூரணி அரசு மருத்துவமனையில் முதலுதவி அளிக்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

செல்வி. சுபபிரியா அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

செல்வி. சுபபிரியா அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிந்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### அரசுத் துறையில் பணியாற்றும் அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கு

# டி.என்.பி.எஸ்.சி.துறை தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களித்த முதல்வருக்கு நன்றி!

### தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத் தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

சென்னை, ஆக 24-

தமிழ்நாடு முன்னேற்ற சங்க மாநிலத்தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்து கொண்டு பல்வேறு வரலாற்று திட்டங்களை அறிவித்து செயலாக்கம் செய்ததை இன்றும் நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறோம்.

இந்நிலையில் முதலமைச்சராக பொறுப்பேற்ற தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயலாக்கம் செய்தும் மாற்றுத்திறனாளிகளின் இதயங்களின் குடிகொண்டார்.

இந்நிலையில், மாற்றுத்திறனாளிகள் நலனில் பெரிதும் கவனம் செலுத்தும் விதமாக, சட்டமன்ற மானியக் கோரிக்கையில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக வைக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளான அரசு துறையில் பணியாற்றும் 50 வயது மேற்பட்ட அனைத்து வகையான மாற்றுத்திறனாளி அரசு பணியாளர்கள் பதவி உயர்வு பெற தடையாக உள்ள டிஎன்பி எஸ்சி துறைத் தேர்வையும் ரத்து செய்து அத்தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தோம்.

இந்த கோரிக்கைகளையும் கனிவுடன் பரிசீலத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு துறையில் பணியாற்றும் கை,கால் அங்க குறைபாடு மாற்றுத்திறனாளிகள், பார்வைத்திறன் பாதிப்பு,செவித்திறன் பாதிப்பு கற்றல் குறைபாடு, அறிவு சார் குறைபாடு மற்றும் புற உலக சிந்தனையற்ற அரசு பணியாளர்களுக்கு பதவி உயர்வு பெற தடையாக உள்ள டிஎன்பிஎஸ்சி நடத்தும் துறைத்தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களித்து தாயுள்ளத்தோடு அரசாணை (நிலை) எண்.11) வெளியிட்டு ஆயிரக்கணக்கான மாற்றுத்திறனாளி அரசு ஊழியர்கள் வாழ்க்கையில் விளக்கேற்றிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கும் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன், சட்டமன்றத்தில் குரல் எழுப்பிய புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா ஆகியோருக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு ரெ.தங்கம் நன்றி தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார்.



தென்காசி மாவட்டத்தில் அமைந்துள்ள உலகப் புகழ்பெற்ற பழைய குற்றாலம் அருவியை வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் நேரில் பார்வையிட்டு, அங்கு #ECOTourism சூழல் சுற்றுலா சார்ந்த கட்டமைப்புகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும், சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்புகளை அமைப்பது தொடர்பாகவும், துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார். உடன் தென்காசி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஜெயபாலன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்!

# சந்திரப்பாடியில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மீன் இறங்கு தளம்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - நிவேதா முருகன்- ஆர்.சுதா பங்கேற்பு!

மயிலாடுதுறை ஆக 24 -

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார் கோயில் ஒன்றியம் சந்திரப்பாடி கிராமத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன் இறங்கு தளத்தை திறந்து வைத்தார்.

அதைத்தொடர்ந்து சந்திர பாடி மீன் இறங்கு தளத்தில் விழா நடைபெற்றது விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம் முருகன் தலைமை தாங்கினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் மணிமேகலை,மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், ஒன்றிய குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர், ஆகியோர் முன்னிலை வைத்தனர்.

விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் சந்திரப்பாடி கிராமத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன் இறங்குதளத்தை திறந்து வைத்த நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி வைத்து பேசியது வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக சந்திரப்பாடி கிராமத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன்இறங்குதளத்தை திறந்து வைத்துள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ் படகு அணையும் துறை, மீன் ஏலக்கூடம், வலைப்பின்னும் கூடம், கான்கிரீட் சாலை வசதி, தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்மூலம் மீனவர்கள் தங்கள் படகுகளை புயல் மற்றும் இயற்கை பேரிடர்களிடமிருந்து சேதமடையாமல் பாதுகாப்பாக நிறுத்தி வைக்க முடியும். சுகாதாரமான முறையில் மீன்களை விற்பனை செய்வதற்கும் மற்றும் மீன்பிடி வலைகளை பாதுகாப்பாக பின்னுவதற்கும் வழிவகை செய்யப்படும்.

மீன்பிடி தொழில் ஊக்குவிக்கப்படும். முதலமைச்சர் அவர்கள் மீனவ கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு அதிக நலன் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். மீன்பிடி தடைக்காலத்தில் ரூ.5 ஆயிரமாக இருந்ததை ரூ.8 ஆயிரமாக உயர்த்தி தந்தவர்கள். மீனவ மக்களை பாதுகாக்க பல திட்டங்களை தந்துள்ளார்கள்.

அதில் முக்கியமானது கடற்கரையின் முகத்துவார பகுதிகளில் தடுப்பணையை அமைத்து தந்திருக்கின்றார்கள். சந்திரபாடி, பூம்புகார், திருமுல்லைவாசல், பழையாறு வரைக்கும் என்னென்ன கோரிக்கைகள் வைத்துள்ளீர்களோ அதை அத்தனையும் கவனமாக நமது முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள்.

இந்த மீன்பிடி ஏலக்கூடம் ரூ.66 இலட்சம் மதிப்பீட்டிலும், வலைபின்னும் கூடம் ரூ.46 இலட்சம் மதிப்பீட்டிலும், படகணையும் தளம் ரூ. 5 கோடி மதிப்பீட்டிலும் போன்ற திட்டங்களை நிறைவேற்றி தந்துள்ளார்கள். 7 இடங்களில் உயர்மின் விளக்குகள் வேண்டும் என்று நீங்கள் வைத்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, அது புதுப்பட்டினத்தில் பழையாறு, திருமுல்லைவாசலில் தொடுவாய், பெருந்தோட்டத்தில் நாயக்கன்குளம் ஆகிவைகளில் அமைத்து அதை செயல்படுத்தி உள்ளார்கள்.

கபடிக்கான உள்அரங்கத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புவி வெப்பமயமாதலால் கடல் மட்டம் உயர்வதை தடுப்பதற்கு அதற்கான தடுப்பணை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. அதில் முக்கியமாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகையில் 1 கோடியே 17 இலட்சம் குடும்பத்தலைவிகள் மாதா மாதம் ரூ.1000 ஆயிரம் பெற்று வருகின்றனர். இப்படிப்பட்ட மகத்தான திட்டத்தை தந்தவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மட்டுமே. நாம் எல்லாத் துறைகளிலும் வெற்றி பெற்றுள்ளோம் என சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி. என். ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு. ஞானவேலன், எஸ்.செல்வமணி, ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், செல்லசேது ரவிக்குமார், ஏ.ஆர்.ராஜா பஞ்சு.குமார், பொதுக்குழு உறுப்பினர் நத்தம் ஏ. வின்சென்ட், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சசுகுணா சுந்தரி குமரவேல், மீன்வளத்துறை இணை இயக்குநர் த.இளம்வழுதி, மீன்வளத்துறை செயற்பொறியாளர், ராஜ்குமார், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ரபீயா நர்கீஸ் பானு, ஒன்றியக்குழு உறுப்பினர் த.செல்வம், தரங்கம்பாடி பேரூர் கழக நிர்வாகிகள் ராஜா வினோத் பாண்டியன் சடகோபன் நந்தா ரங்கராஜ் கருணா,

சந்திரபாடி ஊராட்சி மன்றத்தலைவர் பிரமிளா, துணைத் தலைவர்கயல்விழி மீன்வளத்துறை உதவி இயக்குநர், மோகன்குமார் மற்றும் மீனவ சங்க பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு

# தி.மு.க. இளைஞர் அணி நடத்தும் “என் உயிரினும் மேலான கலைஞர்” நூற்றாண்டு பேச்சுப்போட்டி!

### அமைச்சர், மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு தி.மு.க. இளைஞர் அணி நடத்தும் “என் உயிரினும் மேலான கலைஞர்” நூற்றாண்டு பேச்சுப்போட்டி இன்று (24.8.2024 - சனிக்கிழமை) காலை 8 மணி முதல் சிதம்பரம் கடலூர் பைபாஸ் ரோடு வண்டிகேட் அருகே அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணா கிராண்ட் மகாலில் நடைபெற உள்ளது.

அது சமயம் இப்பேச்சுப் போட்டிக்கு வருகை தரும் மாணவ, மாணவியர் காலை 7 மணி அளவில் ஸ்ரீ கிருஷ்ணா கிராண்ட் மகாலுக்கு வருகை தந்து வருகை பதிவினை உறுதி செய்து கொள்ளவும்.

மேலும், இந்நிகழ்வில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், இந்நாள் ஒன்றியப் பெருந்தலைவர்கள், நகரமன்றத் தலைவர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுகொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.



முதலமைச்சர் – தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மகத்தான திட்டமான “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் விரிவாக்கத்தினை (ஊராட்சிகளில்) குன்றாண்டார்கோவில் கிழக்கு ஒன்றியம் கண்ணாங்குடியில் மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய துணைப் பெருந்தலைவர் சித்ரா எஸ்.ரவிச்சந்திரன், ஒன்றியச் செயலாளர் என்சேட்டு, மாவட்ட கவுன்சிலர் டி.செல்வம், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ராயல் சபா, ஊராட்சி மன்றத் தலைவர்கள் கண்ணாங்குடி எஸ்.கார்த்தி, நாஞ்சூர் எம்.பழனிச்சாமி, செங்களூர் எஸ்.இளையராஜா, பூலியூர் ப.குமரேசன், விசலூர் க.சித்ரா, செட்டிப்பட்டி அழகி பூபதி, வாலியம்பட்டி எஸ்.கஸ்தூரி, ஒடுகம்பட்டி எஸ்.சாமியம்மா, தா.கீழையூர் சித்ரா செல்லபாண்டியன், கந்தர்வக்கோட்டை தொகுதி சமூக வலைதள பொறுப்பாளர் எழில் ராஜா, விராலிமலை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தமிழினியன் உள்ளிட்ட ஒன்றியக் கழக நிர்வாகிகள், வட்டார வளர்ச்சி அலுவலர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று பயனடைந்தனர்.